**36. அநுமான் மருந்து மலையைக் கொண்டுவந்த கதை**

இராம லட்சுமணர்கள் குரங்குப் படைகளோடு கடலைக்கடந்து இலங்கையை அடைந்தார்கள். பல நாள் தொடர்ந்து போர் நடந்துகொண்டிருந்தது. ஒருநாள்இராவணனு டைய மகனான இந்திரசித்து நான்முகக் கணையைச் செலுத்தினான். அதனால் இலட்சுமணர்சுக்கிரீவன் ஆகியோர்களும் குரங்குப் படைகளும் மயக்கமடைந்து மூர்ச்சித்து விழுந்து இறந்தவர்களைப்போலக்கிடந்தார்கள். இராமயிரான் அவர்களுடைய நிலைமையைக் கண்டு மிகுந்த துன் பத்தை யடைந்தார். சாம்பவான் இராமபிரானைத் தேற்றி னான். பிறகு சாம்பவான் அநுமானைப் பார்த்து, " நீ விரை வில் போய்ச்சாக்காட்டை நீக்கும் மூலிகைகளைக் கொண்டு வா என்று கட்டளை யிட்டான். அனுமான் வடக்கே வெகுதொலைவில் உள்ள மருந்து மலைக்குச் சென்றான். சாக் காட்டை நீக்கும்மூலிகைகளைத் தேடிப்பார்த்தான், எளி தாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. அம்மலையை வேரோடு பெயர்த்துஎடுத்துக்கொண்டுவந்தான். அதனுடைய காற்றுப்பட்ட அளவில் எல்லோரும் மயக்கம் ஒழிந்து மூர்ச்சையகன்றுதெளிந்து எழுந்தார்கள்.



[ஆரிய செயல்]

(இராமாயணம்)